# யாழ் மாவட்டத்தில் பேரூந்துப் பயணத்தின் போது பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் தொந்தரவுகள் *2018 – 2019*

*அம்பிகை கஜேந்திரன்[1], ஜெபகௌரி பழனியாண்டி[2], நளினா குமுதன்[3], தருமதன் சொர்ணலிங்கம்[4]*

*[1] ambihaimal@gmail.com [2], jebagowri2@gmail.com [3], Nalinasivacchandran@yahoo.com ,*

*[4] tharumathan92@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்** - *உலகளாவிய ரீதியில் போக்குவரத்தின்போது பெண்கள் பாலியல் தொந்தரவுகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். UNPA இலங்கையில் மேற்கொண்ட ஆய்வின்படி 90% பெண்கள் பேரூந்து மற்றும் புகையிரதபோக்குவரத்தின் போது பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகின்றார்கள். இத்தகைய பாலியல் தொந்தரவானது பாரதூரமான பாலியல் வல்லுறவுக்கும் பாலியல் சமத்துவம் இன்மை என்ற அடிப்படை மனித உரிமை மீறலுக்கும் இட்டுச்செல்கிறது. இதுமட்டுமன்றி பெண்கள் உடல்,உள ரீதியாக பாதிக்கப்படுவதனால் சமுதாயத்தில் தொழில் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் அவர்களின் வினைதிறன் மற்றும் விளைதிறனான பங்களிப்பு மட்டுப்படுத்தப்படுகின்றது. இலங்கையின் புள்ளி விபரத்திணைக்களத்தின் பொருளாதாரநிலைசார்ந்த ஆய்வின் அடிப்படையில் 2016ஆம் ஆண்டு வடமாகாணத்திலேயே வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகிறது. இதனால் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்த வேண்டிய தேவை யாழ்ப்பாண மக்களிடையே அதிகமாகக் காணப்படுகிறது. அந்தவகையில் பெண்களும் தமது அன்றாடத் தேவை கருதி பேரூந்தில் பயணிக்கவேண்டியிருக்கிறது. இதன்காரணமாக பெண்கள் பாலியல் தொந்தரவுகளிற்கு உள்ளாதலும் அதிகளவில் காணப்படுகிறது. பொதுமக்களின் பார்வையில் பெண்களுக்கெதிராகப் பேருந்தில் இடம்பெறும் பாலியல் தொந்தரவுகள் ஒருமுக்கிய பிரச்சினையாகப் பார்க்கப்படுவதில்லை. அதேநேரத்தில் இப்பிரச்சினை தொடர்பான கருத்துப்பரிமாற்றங்கள், ஆய்வுகள் மற்றும் மூலங்கள் போதியளவு கிடைக்கப்பெறாமை, பெண்களுக்கு இதுபற்றிய தெளிவின்மை, விளக்கமின்மை, இதன்பாரதூரங்கள்பற்றிய கவனமின்மை என்பதும் எமது ஆய்விற்கான தேவைப்பாடாக இருந்தது. இவ்ஆய்வினை மேற்கொள்வதற்கு எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட 15 வயதிற்குமேற்பட்ட 280 பெண்களிடம் இருந்து*

*தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவ் ஆய்வுக்கான வினாக்கொத்துக்கள் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடம் வழங்கப்பட்டன. இத்தரவுகளின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெண்களுக்கெதிராகப் பேருந்தில் இடம்பெறும் பாலியல் தொந்தரவுகளை அடையாளப்படுத்தல். இவ்வாறான சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையை வெளிப்படுத்தல், பாலியல் தொந்தரவுகளை கட்டுப்படுத்துவதற்கு இலங்கையில் உள்ள சட்டஏற்பாடுகளை ஆராய்தல், இலங்கைச்சட்டத்தில் காணப்படுகின்ற இடைவெளிகளை நிரப்புவதற்கான முன்மொழிகளைப் பரிந்துரை செய்தல் போன்றவற்றை நோக்காகக்கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது. இவ்வாய்வின் பிரகாரம் யாழ் மாவட்டத்தில் பேருந்துப்பயணத்தின்போது 52.5% சதவீதமான பெண்கள் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகின்றார்கள். 75.71% சதவீதமான பெண்கள் பேருந்தில் இடம்பெறும் பாலியல் தொந்தரவு பற்றிய அறிவினைக்கொண்டுள்ளார்கள்.*

***திறவுச்சொற்கள்*** *– பாலியல் தொந்தரவு, யாழ்ப்பாணம், பேருந்துப்பயணம், போக்குவரத்து*

## *அறிமுகம்*

*பாலியல் தொந்தரவு என்பது வரவேற்கத்தகாத பாலியல் நோக்குடனான நடத்தை, உடலியல் ரீதியான தொடுகையும் அதற்கு மேலானவையும் பாலியல் சாயமூட்டப்பட்ட குறிப்புக்கள், ஆபாசப் படங்களைக்காண்பித்தல், வார்த்தைகள் அல்லது செய்கைகளால் ஆன பாலியல் கோரிக்கை போன்றவற்றை உள்ளடக்கும்.பாலியல் தொந்தரவு உடல், உள, பொருளாதாரரீதியில் இடம்பெறலாம். விருப்பத்திற்கு மாறாக உறவுக்குத்தூண்டுதல், பாலியல் தூண்டலை உருவாக்கல், ஏமாற்றி ஆள்மாறாட்டம் செய்து உறவில் ஈடுபடுதல், ஆயுதங்களில் தாக்குதல், .சம்மதமில்லாத உறவு, பாலியல் இலஞ்சம் என்பன உடல் ரீதியான பாலியல் தொந்தரவுகள் ஆகும். நிதிவளங்களைக் கட்டுப்படுத்தல், நிதிக்காக பிறரில் தங்கியிருக்கும் நிலையை ஏற்படுத்தல், பணங்கிடைக்கும் வழிகளை முடக்குதல், பெண்கள் வேலைக்குச் செல்லுதல், பாடசாலைக்குச் செல்லுதல் போன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் என்பது பொருளாதார ரீதியான பாலியல் தொந்தரவு ஆகும். உளரீதியான பாலியல் தொந்தரவுகளுக்கு உதாரணமாக சுயகௌரவத்தைப் பாதித்தல், விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதாக திறமைகளை குறைத்து மதிப்பிடல்,*

பயமுறுத்தல் மற்றும் குடும்பத்தாரை அவமதித்தல் என்பன அடங்கும். இவை பொதுவான வகையில் பாலியல் தொந்தரவு என்பதற்கு உதாரணமாகும். இவ்வாய்வு பேருந்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் தொந்தரவுபற்றி ஆராய முற்படுகிறது.

## விடயப் பகுப்பாய்வு

### பேருந்தில் பயணம் செய்கின்றபோது பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல்ரீதியான தொந்தரவுகள்

இந்த ஆய்வானது முற்று முழுதாக பேருந்து பிரயாணத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பாலியல் தொந்தரவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே சகல வயதுடைய பெண்களும் எமது ஆய்வின் கருதுபொருளாக அமைந்திருந்தனர். எனவே வினாக் கொத்தானது வயது வேறுபாடுகளின்றி சகல வயதுப் பெண்களிற்கும் தகவல்களைப் பெறுவதற்காக வழங்கப்பட்டது. அத்துடன் இவ்வாய்வானது யாழ் மாவட்டத்தில் இயங்கும் பேருந்துகளை அடிப்படையாகக்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வாக அமைந்திருப்பதால் யாழ் மாவட்டத்திற்குள் வாழுகின்ற பேருந்துப் பயணத்தை தமது வாழ்வின் ஒரு அத்தியாயமாகக் கொண்ட பாடசாலை, பல்கலைக்கழகம், வேலை செய்யும் பெண்கள், வீட்டுப்பணி செய்யும் பெண்கள் என சகல தரப்பட்ட தொழிலும் ஈடுபடுகின்ற 280 பெண்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு, அவர்களிடம் இருந்து உண்மைத் தகவல்கள் பெறப்பட்டன.

வினாக்கொத்து வழங்கப்படும் போது எமது ஆய்வின் நோக்கம் மற்றும் தேவைப்பாடுகளும், பாலியல் தொந்தரவு என்றால் என்ன என்ற அடிப்படை விளக்கமும் வழங்கப்பட்ட பின்னரே அவர்களினை வினாக்களுக்கு விடை அளிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. அவர்கள் விடையளிக்கும் போது அவர்களிற்கு எழுந்த சந்தேகங்கள் உடனுக்குடன் நீக்கப்பட்டு தெளிவான நிலையிலே அவர்கள் வினாக்களிற்கு விடையளித்தார்கள் என்பனவும் உறுதி செய்யப்பட்டன.

வினாக்கொத்திற்கு அமைவாக இந்த ஆய்வானது பெண்கள் பேருந்துப் பயணத்தின் போது பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகிறார்களா? எவ்வயதுப் பிரிவினர் கூடுதலாகப் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாக்கப்படுகிறார்கள்? தொழில் புரியும் பெண்களா? அல்லது வீட்டுப்பணியில் ஈடுபடும் பெண்களும் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாக்கப்படுகிறார்களா? எந்த இலக்கம் கொண்ட பேருந்தில் பாலியல் தொந்தரவுகள் கூடுதலாக

*நடைபெறுகிறது?.பாலியல் தொந்தரவு பற்றிய அறிவானது பெண்கள் மத்தியில் எவ்வாறு உள்ளது? பெண்கள் பாலியல் தொந்தரவில் உள்ளாக்கப்படும் வீதம் மற்றும் விதம், எத்தகைய நேரப் பேருந்துப் பிரயாணத்தின் போது பாலியல் தொந்தரவானது கூடுதலாக நடைபெறுகிறது? பாலியல் தொந்தரவின் போது பெண்களின் மன நிலை, பெண்கள் அதற்கு தைரியமாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்களா? இல்லையெனில் அவ்வாறு எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருப்பதற்கான காரணங்கள்? பாலியல் தொந்தரவினை மேற்கொள்ளும் நபரின் தோற்றம் மற்றும் எவ்வயதுப் பிரிவினர்? இவ்வகையான தொந்தரவினை கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகள்?. என்ற பல வினாக்களிற்கு விடைகளை அறிவதற்கான ஒரு அடிப்படைத் தளமாக இந்த ஆய்வு அமைந்திருந்தது. பெறப்பட்ட விடைகளிற்கு அமைவாக இந்த ஆய்விற்கான முடிவுகள் பின்வருமாறு ஆராயப்படுகின்றன.*

*இந்த ஆய்வின் மிகப்பெரிய வினாவாக அமைந்தது பெண்கள் பேருந்துப் பயணத்தின் போது பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகிறார்களா? இந்த வினாவிற்கு ஆம் என்பதே இறுதி முடிவாகும். பேருந்து பிரயாணத்தின் போது 52.5% பெண்கள் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். 280 பெண்கள் மத்தியில் பெறப்பட்ட தகவல்களில் 147 பெண்கள். ஆம் நாம் பேருந்துப் பிரயாணத்தில் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகின்றோம் எனப்பதிலளித்திருந்தனர்.*

*தகவல்கள் பெறப்பட்ட 280 பேரில் 68 பெண்கள் தாம் பேருந்துப்பிரயாணத்தின் போது ஒருபோதும் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகவில்லை என்ற தகவலினை வழங்கி உள்ளனர். எனினும் இவ்வகையான பெண்களிடம் மேலும் தகவல்களை பெற முயன்ற போது அவர்கள் கூடுதலாக பேருந்துப்பயணத்தை தவிர்ப்பவர்களாகவும், தனிப்பட்ட போக்குவரத்தினை நாடுபவர்களாகவும் காணப்பட்டது. ஆகவே இவர்கள் எப்போதாவது மட்டுமே பேருந்தினை தமது பிரயாணத்திற்காக உபயோகிப்பவர்களாக இருந்தனர் என்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டது.*

*எனவே ஆய்வின் அடிப்படையில் 24% பெண்கள் பேருந்துப்பிரயாணத்தின் போது பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகவில்லை. மேலும் 280 பெண்களில் 65 பெண்கள் தமக்கு பேருந்தில் பாலியல் தொந்தரவு நடைபெறவில்லை, இருப்பினும் தாம் இவ்வகையான தொந்தரவினை தமது நண்பர்கள் மூலமாகவோ*

அல்லது வேறு ஒருவரிற்கு நடைபெறும் போது அதனை அவதானித்தவர்களாகவும் உள்ளனர்.

எனவே இந்த ஆய்வின் இறுதி முடிவில் 23% பெண்கள் பாலியல் தொந்தரவுகள் பற்றி அறிந்தோராக உள்ளனர். இத்தரவானது அளிக்கப்பட்ட வினாக்கொத்தில் நீங்கள் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகியிருங்கின்றீர்களா? என்ற வினாவிற்கு இல்லை எனவும், பின்னர் வினாவப்பட்ட வினாக்களான பாலியல் தொந்தரவு செய்த நபரின் தோற்றம், வயது, பாலியல் தொந்தரவின் போதான உங்கள் மனநிலை? போன்ற வினாக்களிற்கு பதிலளிக்கப்பட்டதிலிருந்து இத்தகைய பெண்கள் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகவில்லை ஆனால் அது பற்றிய அறிவினைக் கொண்டுள்ளார்கள் என்ற தரவு ஆய்வின் இறுதியில் பெறப்பட்டது.

வினாக்கொத்தினை ஆராய்ந்த போது பாலியல் தொந்தரவிற்கு உள்ளானவர்கள் கூடுதலாக பேருந்துப்பயணத்தை பயன்படுத்துபவர்களாகவும் 16-35 வயதிற்கு இடைப்பட்ட பெண்கள் மற்றைய வயது பெண்களை விட கூடுதலாக பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றனர். இத்தகைய வயது பிரிவினருள் பாடசாலை மாணவிகள், பல்கலைக்கழக மாணவிகள், பல்கலைக்கழக சிற்றூழியர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், வேறு தொழில் செய்யும் பெண்கள் என அனைவரும் உள்ளடக்கப்படுகின்றனர். இவ்வகையான பெண்கள் தமது தொழில் புரிவதற்காக பேருந்தினை கூடுதலாக பயன்படுத்துகின்றனர். வீட்டுப்பணியில் ஈடுபடும் பெண்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை ஏனெனில் அவர்கள் பேருந்துப்போக்குவரத்தை எப்போதாவது மட்டுமே பயன்படுத்துகிறார்கள். எனவே தொந்தரவிற்கு உள்ளாகும் வாய்ப்பும் குறைவாக உள்ளது.

இவ் ஆய்வானது பெண்கள் தொடர்ச்சியாகவோ அல்லது அடிக்கடி அல்லது எப்போதாவதா பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகின்றார்கள் என ஆராய்ந்த போது பேருந்து பிரயாணத்தின் போது யாழ் மாவட்டத்திலுள்ள 51% பெண்கள் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகின்ற போதும் அவர்கள் தொடர்ச்சியாக தொந்தரவுகளை சந்திப்பதில்லை. 280 க்கு ஒருவரே தொடர்ச்சியாக தொந்தரவுகளை சந்திப்பதாகவும், 7 பேர் அடிக்கடி தொந்தரவுகளை சந்திப்பதாகவும், 121 பேர் எப்போதாவது தொந்தரவுகளை சந்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே பாலியல் தொந்தவுகளிற்கு உள்ளாகின்றவர்களுள் 94% பெண்கள் எப்போதாவது யாழ்மாவட்டத்திற்குள் பேருந்து பிரயாணத்தின் போது பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகின்றனர். எனவே பெறப்பட்ட தகவல்களுக்கு அமைவாக பெண்கள் எப்போதாவது பாலியல் தொந்தரவிற்கு பேருந்து பிரயாணத்தின் போது உள்ளாகின்றார்கள் என இவ்வாய்வின் இறுதியில் முடிவு எடுக்கப்படுகிறது.

எனினும் அடிக்கடி, மற்றும் தொடர்ச்சியாக பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகின்ற பெண்களை மேலும் வினவியபோது அவர்களின் தொந்தரவிற்கு உள்ளான வீதமானது அதிகமாக இருப்தற்கு பேருந்தின் சனநெரிசல் ஒரு மிகப்பெரும் தாக்கஞ் செலுத்தும் காரணியாக அமைந்திருந்தது. அடிக்கடி பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகும் பெண்கள் கூடுதலாக நெரிசலான பேருந்துப் பயணத்தின் போதே இவ்வகையான தொந்தரவிற்கு உள்ளாகிறார்கள் என்ற முடிவுக்கு இவ்வாய்வானது வருகிறது. எனவே பேருந்தின் சனநெரிசல் பாலியல் தொந்தரவிற்கான ஏதுவான காரணியாக அமைந்துள்ளது.

மேலும் இவ்வாய்வானது பேருந்தில் பெண்கள் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகும் முறைகளை ஆராய்ந்தது. பொதுவாக பாலியல் தொந்தரவானது பார்வை, வார்த்தை, தொடுகை மற்றும் வேறு குறிப்பிட முடியாத வகையில் கூட நடை பெறலாம். இந்த வகையில் பேரூந்தில் பெண்கள் எவ்வகையான பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகின்றார்கள் என ஆராயப்பட்ட போது, 280 பெண்களுள் 17 பெண்கள் பார்வை தொடுகை மற்றும் வார்த்தை என்ற 3 வழிகளாலும் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகியுள்ளனர். 280 இல் 4 பேர் வார்த்தை மற்றும் தொடுகையினாலும் 20 பெண்கள் பார்வை மற்றும் தொடுகையினாலும், 25 பெண்கள் வார்த்தை மற்றும் பார்வையினாலும் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகி உள்ளனர். இவற்றுள் 18 பெண்கள் தனியே வார்த்தையினாலும், 38 பெண்கள் பார்வையினால் மட்டும் 18 பெண்கள் தனியே தொடுகையினால் ஒருவர் வேறு முறையாலும் பாலியல் தொந்தரவிற்கு உள்ளாகின்றனர் இதில் பார்வையினால் துன்புறுத்தல்கள் அதிகளவான நடை பெறுவது அறியமுடிகிறது.எனினும் அடிக்கடி மற்றும் தொடர்ச்சியாக பாலியல் துன்புறுத்தலிற்குஉள்ளாகின்ற பெண்களை மேலும் வினவப்பட்டபோது அவர்களின் துன்புறுத்தலின் வீதமானது பேரூந்தின் சனநெருசல் ஒரு மிகப்பெரும்தாக்கம் செலுத்தும் காரணியாக அமைந்திருந்தது. பெண்கள் அடிக்கடி பாலியல்

துன்புறுத்தலிற்கு உள்ளாகும் பெண்கள் கூடுதலாக நெரிசலான பேருந்துப்பயணத்தின்போதே இவ்வகையான துன்புறுத்தலிற்கு உள்ளாகின்றார்கள் என்ற முடிவுக்கு இவ்வாய்வானது வருகிறது. எனவே பேருந்தில் சனநெருக்கடி பாலியல் துன்புறுத்தலிற்கா ஏதுவான காரணியாக அமைந்துள்ளது.

மேலும் இவ்வாய்வானது பேருந்தில் பெண்கள் பாலியல் துன்புறுத்தலிற்கு உள்ளாகும் முறைகளை ஆராய்ந்தது பொதுவாக பாலியல் துன்புறுத்தலானது பார்வை, வார்த்தை, தொடுகை மற்றும் வேறு குறிப்பிட முடியாத வகையில்கூட நடைபெறலாம். இந்தவகையில் பேரூந்தில் பெண்கள் எவ்வகையான பாலியல் துன்புறுத்தல்களிற்கு உள்ளாகின்றார்கள் என ஆராயப்பட்டபோது, 280 பெண்களுள் 17 பெண்கள் பார்வை, தொடுகை, மற்றும் வார்த்தை என்ற 3 வழிகளாலும் பாலியல் துன்புறுத்தலிற்கு உள்ளாகி உள்ளனனர். 280 க்குள் 4 பேர் வார்த்தை மற்றும் தொடுகையினாலும் 20 பெண்கள் பார்வையினாலும் பாலியல் துன்புறுததலிற்கு உள்ளாகியுள்ளனர். இவற்றுள் 18 பெண்கள் தனியே வார்த்தையினாலும் 38 பெண்கள் பார்வையினால் மட்டும் மற்றும் 18 பேர் தொடுகையினால் ஒருவர் வேறுமுறையிலும் பாலியல் துன்புறுத்தலிற்கு உள்ளாகி இருப்பது அறியமுடிந்தது. இத்தகைய தரவினால் பேருந்தில் பெண்கள் சகல முறையிலும் பாலியல் துன்புறுத்தலிற்கு உள்ளாகின்றனர். இதில் பார்வையினால் துன்புறுத்தல்கள் அதிகளவாக நடைபெறுவது அறிய முடிகிறது. ஆண்களால் பாலியல் துன்புறுத்தலானது பெண்களிற்கு ஏற்படுத்தப்படுகிறது என இவ் ஆய்வு முடிவுக்கு வருகிறது.

அட்டவணை 1. பாலியல் துன்புறுத்தல் நடைபெறும் நேரம்

| நேரம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| காலை | 22 | 20% |
| மதியம் | 18 | 16% |
| மாலை | 58 | 53% |
| இரவு | 12 | 11% |

மூலம்- கள ஆய்வு

*பாலியல் துன்புறுத்தலிற்கு உள்ளான பெண்களில் 59% சதவீதமான பெண்கள் பாலியல் துன்புறுத்தலிற்கு உள்ளான நேரம் பற்றிய வினாக்களிற்கு விடையளித்திருந்தனர். ஆவர்களில் சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட நேரங்களில் தாம் பாலியல் துன்புறுத்தலிற்கு உள்ளாவதாகக் குறிப்பிட்டிருந்தனர். இத்தரவின் அடிப்படையில் மாலை நேரங்களிலேயே பெண்கள் அதிகளவான பாலியல் துன்புறுத்தலிற்குள்ளாகின்றனர். காலையில் 20% மானவர்களும், மதியம் 16% மானவர்களும், மாலையில் 53% மானவர்களும் இரவில் 10.90% மானவர்களும் பாலியல் துன்புறுத்தலிற்கு உள்ளாகின்றனர் என ஆய்வு முடிவுக்கு வருகிறது.*

*பாலியல் துன்புறுத்தல் உணரப்படல்; பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 97.27% மான பெண்களே இவ்வினாவிற்கு விடையளித்துள்ளனர். அதில் 84% மான பெண்கள் தமக்கு பாலியல் துன்புறுத்தல் நடைபெற்ற வேளையில் பாலியல் ரீதியான துன்புறுத்தல் என உணர்ந்துகொண்டார்கள். எனினும் இவற்றுள் 16% மான பெண்கள் பாலியல் துன்புறுத்தலிற்கு தாம் உள்ளாக்கப்பட்ட வேளையில் அதனை அவரகள் பாலியல் துன்புறுத்தலாக உணர்ந்தகொள்ள முடியவில்லை என தரவுகள் பெறப்பட்டள்ளன. இதனை மேலும் ஆராயந்த போது பெண்கள் பாலியல் துன்புறுத்தல் பற்றிய போதிய விளக்கங்கள் இல்லாமை காரணியாக அறியப்பட்டது.*

*அட்டவணை 2. பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் துன்புறுத்தலை உணர்தல்*

| | |
|---|---|
| நடவடிக்கை எடுத்தவர்; | 59% |
| நடவடிக்கை எடுக்காதவர் | 27 % |
| விடையளிக்காதவர் | 14 % |

*மூலம்- கள ஆய்வு*

*பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 59% சதவீதமான பெண்கள் பாலியல் துன்புறுத்தலினை உணர்ந்தவுடன் அதனைத் தடுப்பதறகாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அவர்களின் தரவுகளின் ஊடாக, பெண்கள் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைளை பின்வருமாறு கூறலாம். நடத்துனர் அல்லது சாரதியிடம் முறையிடல், அவ்விடத்தைவிட்டு நகர்தல், வார்த்தை, செய்கைமூலம் எதிர்ப்பைக் காண்பித்தல், இருக்கையை மாற்றி அமர்தல், ஆண்கள் அதிகம் உள்ள*

*இடத்தைவிட்டு விலகிநிற்றல், அதன்பின் பேரூந்துப் பயணத்தை முழுமையாக தவிர்த்தல், குறைத்தல், பெற்றோருடன் பயணித்தல். மேலும் 27% மான பெண்கள் பின்வரும் காரணங்களால் தாம் பாலியல் துன்புறுத்தலை உணர்ந்தபோது எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என தரவுகள் பெறப்பட்டன. அதற்கான காரணங்களாக பின்வருவன கண்டறியப்பட்டன. அச்சம், துணிவின்மை, சிறுபிள்ளை என்ற காரணம், வெட்கம், யாருக்குச் சொல்வதென்று தெரியாமை, அவமரியாதை, என் குடும்பம் பற்றிய பயம், பாடசாலை மதிப்பைக் காப்பாற்றுவதற்கு, அதை வெளிப்படுத்தாமல் இருப்பது பாதுகாப்பானது என உணர்ந்தமை, நடவடிக்கை எடுத்தால் வேறு விளைவுகள் வரலாம் என எண்ணியமை.*

*எனவே இவ் ஆய்வின் இறுதியில் 62% சதவீதமான பெண்கள் பயத்தின் காரணமாகவே தாம் பாலியல் துன்புறுத்தல்களை உணர்ந்தபோதும் தாம் அதனைத் தடுக்க எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்ற முடிவுக்கு வருகிறது. இந்த ஆய்வின் இறுதியில் பெண்கள் என்ற காரணி போதும்; அவர்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தலிற்குள்ளாகாமைக்கு, கவர்ச்சியாக உடையணியவில்லை, வெள்ளைநிறத்தோல் உடையவர்களாக இருக்கவில்லை; இருந்தும் அவர்கள் பாலியல் துன்புறுத்தல்களிற்கு உள்ளாகி இருந்தனர். எனவே பெண் என்ற ஒரு காரணிபோதும் அவர்கள் துன்புறுத்தலிற்குள்ளாதலிற்கு என்பது ஆய்வின் முடிவாகும். மேலும் கல்விகற்றவர், கற்காதவர் மற்றும் எல்லா தோற்றமுடைய ஆண்களும் பாலியல் துன்புறுத்தலினை உண்டாக்குகின்றனர் என்பது ஆய்வின் முடிவாகப் பெறப்பட்டுள்ளது. பெண்கள் பாலியல் துன்புறுத்தலினைக் குறைப்பதற்காக அவர்கள் பேருந்துப்பயணத்தினைத் தவிர்க்கிறார்கள் என்ற முடிவு பெறப்படுகிறது. எனவே இவ் நடவடிக்கையானது பெண்களின் நடமாடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக அமைகிறது. எனவே பாலியல் துன்புறுத்தல் கட்டுப்படுத்தல் என்பது அவசியமாகும். அவ்வாறான நடவடிக்கை பெண்களின் உரிமைகளைப் பேணுவதாக அமைகின்றது.*

## ***பேருந்தில் நடைபெறும் பாலியல் தொந்தரவுகளுக்கு எதிராக நடைமுறையிலுள்ள சட்ட ஒழுங்கமைப்புக்கள்***

*எமது அரசியலமைப்பில் சில அடிப்படை ஒழுங்கமைப்புக்கள் காணப்படுகின்றன அவை பெண்களிற்கெதிரான பாலியல் தொந்தரவுகளைக் கட்டுப்படுத்தும் மற்றும் முற்றாக புறக்கணிக்கும் ஏற்பாடுகளாக உள்ளன. 1978 அரசியலமைப்பின் உறுப்புரை 12 (2)*

*பாலினை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு வேறுபாடுகளும் காட்டக்கூடாது. எனவே பெண்கள் ஆண்களால் வேறுபடுத்தப்பட்டு தொந்தரவுக்குள்ளாக்கப்படுதல் பேருந்து பிரயாணங்களில் நடைபெறுதல் அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறன நடவடிக்கைகள் ஆண்களும் சமம் என்ற அடிப்படை உரிமையைப் பாதுகாப்பதற்கு உறுதுணையாக அமையும். இருப்பினும் இந்த உரிமையானது நாட்டின் பாதுகாப்பு, மக்களின் நன்மை, மக்களின் சுகாதாரம் மற்றும் நன்னடத்தை மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பேணுவதற்காகவும் பொதுநன்மைக்காகவும் மீறப்படலாம். மற்றும் உறுப்புரை 12(4) ஆனது விசேட பாதுகாப்பு சட்டங்களும் நடவடிக்கைகளும் பெண்களின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளலாம் என்பதனை உறுதிப்படுத்துகின்றது. மேலும் அரசியலமைப்பின் உறுப்புரை ஆனது சித்திரவதை வன்மையான நடவடிக்கைகள் மனிதத் தன்மையைப் பாதிக்கும் நடவடிக்கைகளிலிருந்து விடுபடுவதற்கான உரிமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது இருந்தும் இவ் உரிமையானது எந்த கட்டுப்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை.*

*பேருந்தில் நடைபெறும் பெண்களிற்கெதிரான பாலியல் தொந்தரவானது இத்தகைய மேற்குறிப்பிட்ட உரிமைகளை மீறுவதாக அமைகின்றது. எனவே பெண்களின் இந்த உரிமைகளானது பாதுகாக்கப்பட வேண்டும் ஆதலால் பேருந்தில் நடைபெறும் பாலியல் தொந்தரவானது முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.*

*மேலும் உறுப்புரை 14(1) (h) ஆனது நடமாடுவதற்கான உரிமையானது உறுதிப்பட்டுள்ளது. எனவே இந்த உரிமையானது பெண்கள் பேருந்தில் அனுபவிக்கும் பாலியல் தொந்தரவினால் மீறப்படுகின்றது. அத்தோடு பெண்கள் பேருந்தில் பயணஞ் செய்வதற்காக அஞ்சுகின்ற நிலைமைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். இருப்பினும் தேசியபாதுகாப்பு, தேசியஒழுங்கு, தேசிய சுகாதாரம் மற்றும் நன்னடத்தை பாதுகாப்பு என்பன மட்டுப்பாடாக உள்ளன.*

*எனவே இவை தவிர்ந்த மற்றைய சகல நேரங்களிலும் பெண்களிற்கான நடமாடும் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் பல பாராளுமன்றச் சட்டங்கள் பேருந்தில் நடைபெறும் பாலியல் தொந்தரவைத் தடுக்கும் வகையில் அமைந்துள்ளன அவை பின்வருமாறு:*

*பிரிவு 345 இல் பாலியல் தொல்லை கொடுத்தல் ஒரு தண்டனைக்குரிய குற்றமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. தாக்குதல் மூலம்*

அல்லது குற்றவியல் பலாத்காரத்தை உபயோகிப்பதன் மூலம் இன்னோர் ஆளுக்குப் பாலியல் தொல்லை கொடுக்கின்ற அல்லது வார்தைகளை அல்லது செய்கைகளை; பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய இன்னோர் ஆளுக்குப் பாலியல் தொந்தரவை அல்லது தொல்லையைக் கொடுக்கின்ற எவரும் பாலியல் தொல்லை கொடுத்த தவறுக்குக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபது ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்தண்டனையால் அல்லது ஒரு குற்றப்பணத்தினால் அல்லது அத்தகைய மறியற் தண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக அத்தகைய ஆளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றை நட்டஈடாகச் செலுத்துமாறு கட்டளையிடவும் முடியும்.

தண்டனைச் சட்டக்கோவையின் உறுப்புரை 345 இல் கூறப்பட்ட பாலியல் தொல்லைக்குள் பஸ்பிரயாணத்தின் போது பெண்கள் அனுபவிக்கும் தொல்லைகளானவை வார்த்தைகளை அல்லது செய்கைகளைப் பயன்படுத்துவதன முலம் பாலியல் தொந்தரவு கொடுத்தல் என்ற வகைக்குள் உள்ளடக்கப்பட்டபோதும் தண்டனைச்சட்டக்கோவையின் உறுப்புரை 365ஆ இல் விபரிக்கப்பட்ட குற்றத்துக்குள் உள்ளடக்கக் கூடிய வகையில் வீரியமடைந்தது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

அதாவது தண்டனைச்சட்டக்கோவையின் உறுப்புரை 365ஆ இல் பாலியல் அவா நிறைவுக்காக அவரது பிறப்புறுப்பை அல்லது மனித உடம்பில் வேறு ஏதேனும் பாகத்தை அல்லது சாதனத்தை வேறு எவரேனும் ஆளின் ஏதேனும் பாகத்தில் பயன்படுத்தி இருப்பின் இச்செயற்பாடு பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் என்ற வகைக்குள் உள்ளடக்கப்படலாம் .

இந்த வகையில் இந்த ஆய்வில் எம்மால் பேருந்தில் பிரயாணம் பெண்களிற்கிடையில் வழங்கப்பட்ட வினாக்கொத்தின் தொகுப்பிறக -மைவாக பேருந்தில் பெண்கள் இந்த உறுப்புரைப்பிறகமைவான துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பது மிகத்துல்லி -யமான உண்மை எனவே இத்தகைய செயல்களை பாரதூரமான பாலியல் துஷ்பிரயோக என்ற வகைக்குள் உள்வாங்கப்படலாம். இத்தகைய பாரிய பாதிப்பிற்கு பெண்கள் பேருந்தில் பிரயாணத்தின்

போது அனுபவிக்கிறார்கள் எனும் போது இவை நிச்சயமாகச் சரிசெய்யப்படவேண்டும்

மேலும் இப்பிரிவின் விளக்கத்தில் வேலைசெய்யும் இடத்தில் அல்லது வேறுவகையில் அதிகாரத்தில் உள்ள ஆளொருவரினால் சொற்கள் மூலம் அல்லது செயல் மூலம் பயன்படுத்தப்படும் வரவேற்கத்தகாத பாலியல் அணுகல்கள் பாலியல் தொல்லைகள் தவறாக அமைதல் வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறது.

**பெண்களுக்கான பட்டயம் (women's charter)**

இப்பட்டயமானது CEDAW என்ற உருவாக்கப்பட்டது இது பாலின சமத்துவத்தையும், பாலின வேறுபாடுகளிலிருந்து விடுபடும் சுதந்திரத்தினையும் இலங்கை அரசானது தமது அரசியலமைப்பில் உள்வாங்குவதற்கு ஊக்குவிக்கும் சட்டமாக அமைகிறது.

- பாலியல் தொந்தரவானது ஒருவகை வேறுபாடாகவும் உரிமை மீறல்களில் ஒன்றாகவும் கருதலாம். பெண்களின் பாலின சமத்துவ உரிமையானது பாலியல் தொல்லைகள் ஏற்படாது தடுப்பதன் மூலம் பாதுகாக்கப்படலாம். எனவே இப்பட்டயம் பற்றிய கற்கையானது பாலியல் தொந்தரவுகளை கட்டுபடுத்துவதற்கு மிக முக்கியமானது. இப்பட்டயத்தின் முன்னுரையில் பாலினம் தொடர்பான வன்முறையானது மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தையும் மீறலாகவும் அதனை அனுபவிப்பதற்கான தடையாகவும் கருதப்படுகிறது. உறுப்புரை 16- பெண்கள் பால் சம்மந்தமான வன்முறையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிமை. இப்பட்டயமானது உறுப்புரை 16 இல் இலங்கையானது பின்வரும் அளவீடுகளை முன்னெடுக்கவேண்டும் என தேவைப்படுத்துகிறது. அடிப்படைச்சட்டத்திலும் மற்றும் அதனை தடுப்பதற்கான அளவீடுகளை மேற்கொள்வதிலும் சட்ட ஒழுங்கு மாற்றங்களை மேம்படுத்த வேண்டும்.
- சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளில் கட்டமைப்பு மாற்றத்தினையும் மற்றும் அவற்றின் கொள்ளளவினை பெண்களிற் கெதிரான வன்முறைகள் தொடர்பான குற்றங்களை கையாள்வதற்கு ஏற்றாற்போல் பலப்படுத்த வேண்டும்

- *அரசசார்பற்ற நிறுவனங்கள் சமூகம் தொடர்பான நிறுவனங்கள் மற்றும் போரின் காலப்பகுதியில் வன்முறைகளில் பாதிக்கப்பட்ட பெண்களிற்கு ஆதரவும் அவர்களுக்கான ஆலோசனைகளை வழங்கும் சேவைகளையும் நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சி திட்டங்களையும் ஆதரவளிக்கும் சட்டங்களையும் மேம்படுத்த வேண்டும்.*

***சிறுவர் உரிமைக்கான பட்டயம்***

*சிறுவர்களும் பாலியல் தொல்லைகளிற்கு உள்ளாகிறார்கள். எனவே அவர்களின் உரிமை மீறல்களை பாதுகாப்பத்கு இப்பட்டயம் உதவுகிறது.உறுப்புரை 1 - 18 வயதுக்கு குறைந்தவர்கள் அனைவரும் சிறுவர்கள் உறுப்புரை 2(a) பால் தொடர்பான வேறுபாடுகளிலிருந்து சிறுவர்கள் பாதுகாக்கப்பட்டு அவர்களது உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்.எனவே இதன் மூலம் பாலியல் தொந்தரவானது ஒருவகை வேறுபாடு என்பதனால் அது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகிறது. உறுப்புரை2(b) இலங்கையானது சிறுவர்களின் வேறுபாடுகளை தவிர்ப்பதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உறுப்புரை 6 சகல சிறுவர்களும் வாழ்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார்கள். பாலியல் தொந்தரவானது சிறுவர்களின் தனித்துவத்தையுத் தனியுரிமை மற்றும் கௌரவம், மதிப்பு என்பவற்றைப் பாதிக்கின்றது. எனவே இப்பட்டயத்தின் உறுப்புரை 16 இல் சிறுவர்களின் கௌரவம் மற்றும் மதிப்பு பேணப்பட வேண்டும் என வலியுறுத்துகிறது.*

***சட்டத்திலுள்ள குறைபாடுகள்***

*பிரிவு 345 தண்டனைச் சட்டக்கோவை 1995 இல் பேருந்தில் நடைபெறும் பாலியல் தொந்தரவு பற்றிய தனித்துவமான அடையாளப்படுத்தல் இல்லை. வார்த்தைகள் மற்றும் செயல்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் அதற்கான சரியான பொருட்கோடலோ, வரைவிலக்கணமோ சட்டக்கோவையில் வழங்கப்படவில்லை. மற்றும் இவ்வகையான செயற்பாடுகள் அதாவது பாலியல் தொந்தரவானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்தல் என்பது மிகவும் கடினமானது. தொடுகை, பார்வை, வார்த்தைகள் இவற்றுக்கெல்லாம் சாட்சியங்களைக் கொண்டு நிரூபித்தல் என்பது கடினமானது.*

*பிரிவு 345 இன் விளக்கவுரையில் நிர்வாகத்தில் உள்ள நபர்கள் நடவடிக்கை மூலமோ வார்த்தை மூலமே செய்யப்படும் நடவடிக்கை எனக் குறிப்பிடப்படுகின்றது. இதில் நிர்வாகத்தில் அல்லது பதவியிலுள்ள நபர்களை மட்டும் குறித்து நிற்கின்றது. மற்றும் வேறு இடங்கள் என்றும் கூறப்படுகின்றது. (இதில் பேரூந்து உள்ளடங்குகின்றதா என்பதும் சந்தேகத்திற்கிடமாக உள்ளது).*

***பாலியல் தொந்தரவு தொடர்பான சர்வதேச ஏற்பாடுகள்***

***ஐக்கியநாடுகள் சபையின் பட்டயம் (UN CHARTER)***

*இது ஆண்கள் மற்றும் பெண்களின் சமத்துவத்தினையும் கௌரவத்தினையும் மனித பெறுமதியினையும் மனித உரிமைகளையும் பாதுகாக்கின்ற சட்டமாக உள்ளது. ஐக்கியநாடுகள் சபையின் நோக்கத்தினை அடைவதற்காக பொருளாதார, சமூக, கலாசார மற்றும் மனிதாபிமான தன்மையுள்ள சர்வதேச பிரச்சினைகளைத் தீர்த்து சர்வதேச ஒருங்கிணைப்பினை அடைவதற்கும் மனித உரிமைகளுக்கான மதிப்பினை மேம்படுத்துவதற்கும் மற்றும் இனம், பால், மொழி, சமய வேறுபாடின்றி அடிப்படை சுதந்திரத்தை வழங்குவதற்கும் ஒரு வழிகாட்டிய இப்பட்டயம் அமைகின்றது. பெண்களுக்கெதிரான வன்முறைகளையும் பிரகடனம் (DEVAW) பெண்களுக்கெதிரான வன்முறையானது பெண்களின் உரிமைகள் மற்றம் அடிப்படை சுதந்திரத்தின மீறுகின்றது என உறதிப்படுத்துகின்றது. இப்பிரகடனமானது பெண்களுக்கெதிரான பாலியல் தொந்தரவுகளை அடையாளப்படுத்துவதற்கு உதவகின்றது. உறுப்புரை 2(b) ஆனது பெண்களக்கெதிரான வன்முறையினை வரைவிலக்கணப்படுத்துகின்றது. இவற்றில் தொழில் இடங்களிலும், கல்வி நிலையங்களிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் எற்படும் பாலியல் தொந்தரவுகளும் உள்ளடங்குகின்றது. இப்பிரகடனமானது பெண்களுக்கெதிரான வன்முறையினைத் தடுப்பதற்கான நடவடிக்கையினையும் குற்றவியல் குடியியல் மற்றம் ஏனைய நிர்வாகத்துறை தண்டனையையும் ஊக்குவிக்கின்றது.*

***சிறுவர் உரிமை சமவாயம் (CRC)***

*சிறுவர் உரிமை சமவாயத்தினை பயன்படுத்தி இலங்கையில் சிறுவர்களுக்கான பட்டயம் உருவாக்கப்பட்டது. பெண் சிறவர்களும் போக்குவரத்தின்போது பாலியல் தொந்தரவுகளுக்கு முகம்கொடுக்கின்றனர். எனவே சிறுவர் உரிமை சமவாயமுமம் பாலியல் தொந்தரவுகள் தொடர்பான கற்கைகளுக்கு அவசியமானது.*

அது மட்டுமல்லாது இந்த சமவாயம் சிறுவர்கள் பாலியல் தொந்தரவுகளில் இருந்து பாதுகாப்புப்பெறும் உரிமையை வலியுறுத்துகின்றது.

உறுப்புரை 20 எல்லாவகையான உடலியல் உளவியல் வன்முறைகளில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக இலங்கை பொருத்தமான நிர்வாக சட்ட, சமூக மற்றும் கல்வியல் அளவீடுகளை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.18 வயதிற்கு குறைந்த எந்தவொரு நபரையும் சிறுவராக இந்த சட்டவாயம் வரையறுக்கின்றது.

இலங்கையில் சிறுவர் பட்டயத்தினுள் உறுப்புரை 01 இல் இதனை உறுதிப்படுத்துகின்றது. உறுப்புரை 02 இல் ஒரு நாடானது சிறுவர்களை அனைத்து வகையான வேறபாடுகளிலிருந்தும் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. இது சிறுவர் பட்டயத்தின் உறுப்புரை 2(b) யில் உறுதிப்படுத்தபபடுகின்றது.

சமவாயத்தின் உறுப்புரை 16 இலும் சிறுவர் பட்டயத்தின் உறுப்புரை 16 இலும் சிறுவர்களுக்கு அவர்களின் தனியுரிமை (privacy) யில் மற்றையவர்களின் ஈடுபாடுகளிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை உண்டு என உறுதிப்படுத்துகிறது.

அத்தோடு சமவாயத்தின் உறுப்புரை 20 இலும் சிறுவர் பட்டயத்தின் உறுப்புரை 20 இலும் சிறுவர்களுக்கு மீறல்களிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை உண்டு என வலியுறுத்துகிறது. சமவாயத்தின் உறுப்புரை 6 இலும் சிறுவர் பட்டயத்தின் உறுப்புரை 6 இலும் சிறுவர்களிற்கு வாழும் உரிமை உண்டு எனவும் அது பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது.

**பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் களையும் சமவாயம் (CEDAW)**

இச் சமவாயமானது பெண்களின் முன்னேற்றங்களை உறுதிப்படுத்துகிறது. இலங்கை இச்சமவாயத்தில் கையொப்பமிட்டதால் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்தவதற்கும் கடமைப்பாட்டிலுள்ளது. பெண்கள் பேரூந்தில் பாலியல் தொல்லைகுள்ளாதல் என்பது அவர்களின் உரிமையினை மீறுகின்ற செயற்பாடாகும். இச்சமவாயத்தின் உறுப்புரை 01 பெண்களிற்கெதிரான வன்முறையானது ஒருவகை வேறுபாடாக சுட்டுகிறது. பெண்களிற்கான பட்டயத்தின் முன்னுரையில் பாலினை

*அடிப்படையாகக்கொண்ட தொல்லையானது பெண்களின் அடிப்படை சுதந்திரத்தினையும் மனித உரிமைகளையும் மீறுகின்றதாகவும் உரிமைகளை அனுபவிப்பதற்கான தடையாகவும் அமைகிறது எனக் குறிப்பிடுகின்றது. இது எல்லா இடங்களிலும் பெண்களின் சமத்துவத்தை அங்கீகரிக்கின்றது.சமவாயத்தின் உறுப்புரை 2 இல் பொதுநிர்வாகத்துறையும், நிறுவனங்களும் பெண்களிற்கெதிரான வேறுபாட்டினை உடைய நடைமுறைகளையும் மாற்றியமைக்கவும் நீக்கவும் உடனடியாக தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. பெண்களிற்கான பட்டயத்திலும் இலங்கை அரசானது பெண்களிற்கெதிரான வன்முறைகளை தடுப்பதற்கு சகல முறைமைகளையும் கையாள வேண்டும் என தேவைப்படுகின்றது.*

***பீஜிங் பிரகடனம் மற்றும் நடைமுறைக்கான அடித்தளம்***

*இப் பிரகடனமானது பாலியல் துன்புறுத்தல் ஒருவகையான பெண்களிற்கெதிரான வன்முறை என்பதனையும் ஒருவகையான வேறுபாடு என்பதனையும் உறுதிப்படுத்துகின்றது. இது அரசாங்கமானது பாலியல் துன்புறுத்தலிற்கெதிராக சட்டங்களை உருவாக்குகிறதா என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் தொழிலாளர்கள் சங்கங்கள் குடியியல் சமூகங்களை ஒருங்கிணைத்து கண்காணிக்க தூண்டுகிறது. இவ்விடயமானது இப்பிரகடனத்தின் 478 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

***மனித உரிமைக்கான சர்வதேச பிரகடனம் (UDHR)***

*உறுப்புரை 01 இல் எல்லா மனித உயிர்களும் சம கௌரவத்தையும் உரிமைகளையும் உடையவர்கள் எனக் குறிப்பிடுகின்றது.உறுப்புரை 02இல் ஒவ்வொரு மனிதனும் மனித உரிமைகளையும் சுதந்திரத்தையும் எந்தவித பால்வேறுபாடுகளோஅல்லது வேறு பாகுபாடகளோ இன்றிப் பெறுவதற்குத் தகுதி உடையவர்கள்.உறுப்புரை 03 இல் ஒவ்வொரு மனிதனும் வாழ்வதற்கான உரிமை மற்றும் சுதந்திரம் தனிமனித பாதுகாப்பு என்பவற்றுக்கு உரித்துடையவன்.உறுப்புரை 05 இல் எவரும் சித்திரவதை கொடிய மனிதத்தன்மை இன்றிய நடவடிக்கைகளிற்கும் தண்டனைகளிற்கும் உள்ளாக்கப்படக்கூடாது எனவும் கூறுகிறது.பாலியல் துன்புறுத்தலான பெண்களின் உளவியல் மற்றும் உடலியல் சுகாதாரத்தையும் மனித கௌரவத்தையும் பாதிக்கின்றது எனக் குறிப்பிடுகின்றது.*

**சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை**

*உறுப்புரை 26 சமத்துவத்திற்கான உரிமையை வலியுறுத்துகிறது. உறுப்புரை 7இல் சித்திரவதை கொடிய மனிதத்தன்மை இன்றிய நடவடிக்கைகளிலிருந்து விடுபடுவதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.உறுப்புரை-09 ஒவ்வொரு மனிதரினதும் சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக் காண உரிமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.*

**வியன்னா பிரகடனம் மற்றும் நடைமுறைக்கான வேலைத்திட்டம்**

*உறுப்புரை 18 பெண்களினது மனித உரிமையானது சர்வதேச மனித உரிமைகளிலிருந்து மீளப்பெறமுடியாது. ஒருங்கிணைந்த பிரிக்கப்படவியலாதாக உள்ளது. எல்லாவகையான பாலியல் துன்புறுத்தல்களும் மனித கௌரவத்துடனும் மனித பெறுமதியுடன் ஒப்பிடமுடியாததாக உள்ளதால் அது முற்றாக களையப்பட வேண்டும்.*

**பேருந்துகளில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் தொந்தரவுகளை இல்லாதொழிப்பதற்கான பரிந்துரைகள்**

*பேருந்துகளில் நிகழும் பாலியல் தொந்தரவுகளை தவிர்ப்பதற்கு தகவல் வழங்கிய பெண்களின் பரிந்துரைகள் பின்வருமாறு:*

*ஆண் பெண்களுக்கான தனியான பேரூந்துகளை ஏற்படுத்துதல், சட்டரீதியான தகுந்த தண்டப்பணம் மற்றும் தண்டனைகளை வழங்குதல்;, பாடசாலை மாணவர்களுக்கென தனியான பேருந்துகளை ஏற்படுத்துதல், பேருந்தில் இருக்கைகளுக்கு மேலதிகமான ஆட்களை ஏற்றுவதை தவிர்த்தல், மதுபோதையில் உள்ளவர்களை பேரூந்தில் ஏற்றுவதைத் தவிர்த்தல், அரச பேருந்துகளை சரியான நேரத்திற்கு கடமைக்கு அமர்த்துதல், பேரூந்துகளில் பெண் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களை நியமித்தல், பேருந்துகளில் CCTV கமெராக்களை பொருத்துதல்.*

*பேருந்துகளில் நிகழும் பாலியல் தொந்தரவுகளை தவிர்ப்பதற்கு ஆய்வாளர்களின் பரிந்துரைகளில் சட்ட ரீதியான பரிந்துரைகள் பின்வருமாறு:*

*தண்டனைச் சட்டக்கோவைபிரிவு 345 ஆனது பாலியல் தொல்லை கொடுத்தலுக்கு பரந்த ஒருவரையறையினை உள்ளடக்குமாறு சீர்த்திருத்தம் செய்யப்படவேண்டும். தண்டனைச் சட்டக்கோவைபிரிவு 345 இன் படி தாக்குதல் மூலம் அல்லது குற்றவியல்*

பலாத்காரத்தை உபயோகிப்பதன் மூலம் பிறிதொரு நபருக்கு பாலியல் தொல்லை கொடுக்கின்ற அல்லது வார்த்தைகளை அல்லது செய்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய பிறிதொரு நபருக்கு பாலியல் தொந்தரவை அல்லது தொல்லையைக் கொடுக்கின்ற எவரும் பாலியல் தொல்லையைக் கொடுத்த தவறுக்கு குற்றவாளியாவார். இந்தப் பிரிவின் விளக்கம் 1 இற்கு அமைய சொற்கள் மூலம் அல்லது செயல்கள் மூலம் பயன்படுத்தப்படும் வரவேற்கத்தகாத பாலியல் அணுகல்கள், பாலியல் தொல்லைத் தவறாக அமையும். இருப்பினும் விளக்கம் 1 ஆனது சொற்கள் மற்றும் செயல் என்பன எவற்றை உள்ளடக்கும் என விவரிக்க தவறியுள்ளது. எனவே இந்த வரையறையானது பாலியல் தொல்லை நடைபெற்றதா இல்லையா என தீர்மானிப்பதற்குப் போதுமானதாக இல்லை. ஆயினும் இந்திய தண்டனைச் சட்டக்கோவை 1860 இன் பிரிவு354(A) எவ்வாறான செயல்கள் பாலியல் தொந்தரவுகளாகக் கருதப்படும் என வரையறுத்து கூறியுளளது. எனவே இலங்கை தண்டனைச் சட்டக்கோவையிலும் இந்திய தண்டனைச் சட்டக்கோவை போன்று எவ்வாறான செயற்பாடுகள் பாலியல் தொந்தரவுகளாகப் கருதப்படும் என இணைத்துக்கொள்ளப்பட வேண்டும். தண்டணைச் சட்டக்கோவை பிரிவு 345 ஆனது பேரூந்துகளில் நடைபெறும் பாலியல் தொந்தரவுகளையும் உள்ளடக்கியதாக சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். பெரு நாட்டில் அண்மையில் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த மசோதாவானது பேரூந்துகளில் இடம்பெறும் பாலியல் தொந்தரவுகளையும் உள்ளடக்கியுள்ளது. எனவே இலங்கை தண்டனைச் சட்டக்கோவையும் பெரு நாட்டின் மசோதாவை போன்று சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும்.

தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 345 விளக்கம் 1 ஆனது அதிகாரத்தில் உள்ள நபரொருவரினால் ஏற்படுத்தப்படும் பாலியல் தொந்தரவுகளை மட்டுமே உள்ளடக்குகின்றது. எனவே இது சீர்த்திருத்தப்பட்டு "அனைத்து நபர்களினாலும் ஏற்படுத்தப்படும் பாலியல் தொந்தரவுகள்" என்று மாற்றியமைக்கப்பட வேண்டும். ஏனெனில் பேரூந்துகளில் அதிகாரத்தில் இல்லாத நபர்களினாலும் பாலியல் தொந்தரவுகள் ஏற்படுத்தப்படும்.

1978ம் ஆண்டு இலங்கையின் அரசியலமைப்பில் உறுப்புரை 12(4) இல் பெண்களுக்கு ஒரு மேலோட்டமான உரிமையை மட்டுமே வழங்கியுள்ளது. இன்றைய சூழ்நிலையில் இலங்கை அரசியலமைப்பு பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமை போதுமானதாக இல்லை.

எனவே புதிய அரசியலமைப்பில் பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் உரிமைகள் சம்பந்தமான தனியான அடிப்படை உரிமை இயற்றப்பட வேண்டும்.

1978ம் ஆண்டு இலங்கையின் அரசியலமைப்பின் வாழ்வதற்கான உரிமையானது உறுப்புரை 13(4) இல் மறைமுறைமாகவே கூறப்பட்டுள்ளது. ஆயினும் இந்திய அரசியலமைப்பானது உறுப்புரை 21 இல் வாழ்வதற்கான உரிமையை வெளிப்படையாகக் கூறப்படுகின்றது. எனவே இலங்கையில் அமைக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பானது வாழ்வதற்கான உரிமையை வெளிப்படையாக வழங்க வேண்டும்.

பெண்களின் போக்குவரத்து பாதுகாப்பு சம்பந்தமான புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். பேருந்துகளில் நிகழும் பாலியல் தொந்தரவுகளை தவிர்ப்பதற்கு ஆய்வாளர்களின் நடைமுறைரீதியான பரிந்துரைகள், பேரூந்துகளில் இடம்பெறும் பாலியல் தொந்தரவுகள் மற்றும் அதனை எவ்வாறு தவிர்த்துக்கொள்ளலாம் தொடர்பான விழிப்புணர்வுகளை பொதுமக்களுக்கு அரசாங்கம் வழங்க வேண்டும். பாலியல் தொந்தரவுகள் தொடர்பான புகார் வழங்குபவர்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். பெரும்பாலான பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பின்மை காரணமாக புகார் வழங்குவதிலிருந்து பின்வாங்குகின்றனர். எனவே அவர்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். பொலிஸ் நிலையங்களில் பெண் பொலிஸ் அதிகாரிகளை பணியில் அமர்த்தி புகார் அளிக்கும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். பாடசாலை பாடப்பரப்பில் பாலியல் தொந்தரவுகளில் இருந்து பாதுகாத்துக்கொள்ளும் வழிமுறைகளில் ஒரு பாடமாக இணைக்கப்பட வேண்டும். பேரூந்துகளில் பாலியல் தொந்தரவு தொடர்பான விழிப்புணர்வு அட்டைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

**முடிவுரை**

இந்த ஆய்வானது பெண்கள் பொதுப்போக்குவரத்தில் பயணிக்கும்போது எதிர்கொள்ளும் பாலியல் ரீதியான தொந்தரவுகள் பற்றியே அமைந்துள்ளது. குறிப்பாக பெண்கள் பேருந்தில் பயணிக்கும்போது அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற பாலியல் தொந்தரவுகள் மற்றும் துஸ்பிரயோகங்கள் பற்றியே இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது என்ற வகையில் பெரும்பாலான பெண்கள் இவ்வகையான தொந்தரவினால் பாதிக்கப்படுகின்றனர் என்பதனை அறிய முடிகின்றது.

*பேருந்தில் பயணிக்கும் பெண்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெரும்பாலான பெண்கள் தமது பயணங்களை சுதந்திரமாக மேற்கொள்வதில்லை என அறியமுடிகின்றது. அவர்கள் பேருந்தில் பயணிக்கும்போது பாலியல் ரீதியிலான தொந்தரவுகளைச் சந்திக்கின்றனர். மேலும் சிலர் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற பாலியல் ரீதியான இத்தவறுகளைப் பார்த்தவர்களாகவோ அறிந்தவர்களாகவோ காணப்படுகின்றனர். எவ்வாறு இருப்பினும் ஒரு சில பெண்களே இவ்வகையான குற்றங்களைச் சந்திக்கும்போது அதனை வெளிப்படுத்துகின்றனர். மற்றயவர்கள் தாங்களாகவே அவ் இடங்களில் இருந்து விலகுவதையும் அவதானிக்கலாம். மேலும் சில பெண்கள் இவ்வகையான குற்றங்களை வெளிப்படுத்தும் போது அது தமது கௌரவத்தையும் பாதிக்கும் என்ற காரணத்தினால் இவ்வகையான குற்றம் இடம்பெறும்போது வெளிப்படுத்தத் தவறுகின்றனர்.*

*இவை தவிர மேலும் சில பெண்கள் இதனை ஒரு குற்றமாகப் பார்க்காது இதனை ஒரு இயல்பு நிலையாக கருதுவதனை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான சிந்தனைப் போக்கானது இவ்வகையான குற்றங்கள் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைகின்றது. இச் சிந்தனைப் போக்கானது இவ்வகையான குற்றங்கள் ஒருசிலர் தொடர்ச்சியாக ஈடுபடுவதனை அவதானிக்கலாம்.*

*இலங்கையில் சட்ட ஏற்பாடுகள் காணப்படும் அதேவேளை இலங்கையானது சர்வதேச உடன்படிக்கைகள் சமவாயங்களிலும் கையொப்பமிட்ட நாடாகவும் காணப்படுகின்றது. எனினும் இவ்வகையான குற்றங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதை அவதானிக்கலாம். பெண்களுக்கு எதிராக பேருந்துகளில் இடம்பெறுகின்ற பாலியல் தொந்தரவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஏனைய நாடுகளில் காணப்படுகின்ற சிறந்த வழிமுறைகளை இலங்கை அரசானது நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும் சட்ட ஏற்பாடுகளை கடினப்படுத்தவதன் ஊடாகவும் இக் குற்றங்களைக் குறைத்துக்கொள்ளலாம்.*

### துணை நூற் பட்டியல்


Convention on the Elimination of All Forms of Discrimination against Women 1979. Availableat: https://www.ohchr.org/sites/default/files/Documents/Professional Interest/ cedaw.pdf (Accessed: 20 May 2022).

*இலங்கை ஜனநாய சோசலிச குடியரசின் இரண்டாம் குடியரசு யாப்பு* 1978, Available at: https://www.parliament.lk/files/pdf/constitution.pdf (Accessed: 25 May 2022).

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்கான சர்வதேச பிரகடனம்* 1948. Available at: https://www.un.org/en/about-us/universal-declaration-of-human-rights (Accessed: 29 June 2022).

*சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை* 1966, Available at: https://www.equalityhumanrights.com/en/our-human-rights-work/monitoring-and-promotinguntreaties/internationalcovenantciviland#:~:text=ICCPR%20is%20an%20international%20human, fair%20trial%20rights (Accessed: 28 May 2022).

*சிறுவர் உரிமை சமவாயம்* 1989. Available at: https://www.ohchr.org/en/treaty-bodies/crc (Accessed: 30 May 2022).

*தண்டனைச் சட்டக் கோவை, இல-22,* 1993, Available at: https://www.lawnet.gov.lk/penal-code-2/ (Accessed: 25 May 2022).

*பீஜிங் பிரகடனம் மற்றும் நடைமுறைக்கான அடித்தளம்;* 1995, Available at :https://www.un.org/womenwatch/daw/beijing/pdf/BDPfA%20E.pdf (Accessed: 25 June 2022).

*பெண்கள் பட்டயம்* 2010, Available at: https://www.un.org/en/about-us/un-charter/full-text. (Accessed: 25 June 2022).

*வியன்னா பிரகடனம் மற்றும் நடைமுறைக்கான வேலைத்திட்டம்* 1993. Available at: https://www.un.org/en/conferences/human-rights/vienna1993 (Accessed: 27 May 2022).